நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# தமிழ் 2



திரைகடலோடினும் தீந்தமிழ் பேணுதும்

## பாடம் 1



என் பெயர் வாணி.

எனக்கு எட்டு வயது.

எனக்கு ஓர் அண்ணா இருக்கிறார்.



அவர் யார் தெரியுமா?

அவர் என் அண்ணா.

அவர் பெயர் கண்ணன்.

## பாடம் 9

ஆஸ்திரேலியாவின் (அவுஸ்திரேலியாவின்) மிகப் பெரிய நகரம் சிட்னி.



சிட்னியின் மிக உயர்ந்த கட்டடம் Centrepoint. அதன் உச்சித் தளத்திற்கு அவர்கள் சென்றார்கள்.

அங்கிருந்து தொலைநோக்கியால் பார்த்தார்கள்.

"பெரியப்பா! இங்கிருந்து பார்த்தால் சிட்னி முழுவதும் தெரிகிறது. அதோ அந்தத் திசையில் எங்கள் வீடு இருக்கிறது. தொலைநோக்கி இல்லாமல் வீதியில் பாருங்கள், வாகனங்கள் எறும்புகள் போலச் சிறிதாகத் தெரிகின்றன."

இவ்வாறு பலவற்றை வாணி கூறி மகிழ்ந்தாள்.

## சித்திரை
## 1

சித்திரை மாதம் முதலாம் நாள், தமிழ்ப்
புதுவருட தினம்.
அன்று வருடப் பிறப்புப் பண்டிகை.
நீராடிப் புதிய ஆடைகள் அணிவோம்.
விருந்தினரை வரவேற்று உபசரிப்போம்.
வீட்டில் விருந்துண்டு மகிழ்வோம்.



அன்று பலரும்
கோயிலுக்குச் சென்று
வணங்குவார்கள்.